<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>

<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை

<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.174/2018.</u>

<u>சி.என்.ஆர். எண்.TNTU09-000270-2018</u>

வரிசை எண்.1	விளக்கம்	விவரங்கள்
1.	குற்றமுறையிடுபவர்	அப்துல் ரஹீம் த/பெ. அப்துல் கபூர், நெ.179/104-35, 8-வது தெரு, சித்திகாபாத், காதர்பேட்டை, வாணியம்பாடி, வேலூர் மாவட்டம்.
2.	எதிரி	N.M.நிஜாமுதின், த/பெ. S.M.நைனா முகமது. கதவு எண்.126, பிள்ளையார் கோவில் தெரு, ஆரம்பாக்கம், கும்மிடிபூண்டி, திருவள்ளூர் மாவட்டம் -601 201.
3.	குற்றம்	138 NI ACT
4.	சம்பவம் நடந்த தேதி	29.07.2017
5.	முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்ட நாள்	20.04.2018
6.	எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்	-
7.	குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்	-
8.	கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்	01.09.2018
9.	கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள்.	-

10	வழக்கின் சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்	பு.த.சா.1 – 18.11.2025, 27.02.2026, 27.03.2026. பு.த.சா.2 – 06.05.2026,09.07.2026
11	எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள்	21.07.2026
12	எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்	–
13	தீர்ப்பு பகரப்பட்ட நாள்	29.07.2026
14	தீர்வு	கு.வி.மு.ச.பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை.

<u>**நீதித்துறை படிவம் எண். 61**</u>

புகார்தாரர் : அப்துல் ரஹீம் த/பெ. அப்துல் கபூர்

எதிரி : N.M.நிஜாமுதின், த/பெ. S.M.நைனா முகமது.

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (1) ன் கீழ் விடுதலை.

தண்டனை: இறுதியாக அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து கு.வி.மு.ச பிரிவு 255(1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

வரிசை எண்	எதிரியின் பெயர்	தந்தை/ கணவர் பெயர்	சாதி (அ) இனம்	தொழில்	முகவரி	வயது
1.	N.M.நிஜாமுதின்	S.M.நைனா முகமது	மூஸ்லீம்	–	கதவு எண்.126, பிள்ளையார் கோவில் தெரு, ஆரம்பாக்கம், கும்மிடிபூண்டி, திருவள்ளூர் மாவட்டம் – 601 201.	29

தேதி							தாமதம் (ம) அதன் விளக்கம்.
குற்றம்	புகார் அறிக்கை	எதிரி கைது செய்யப்பட்ட நாள்	பிணையில் சென்ற நாள்	வழக்கு விசாரணையின் தொடக்கம்	வழக்கு விசாரணையின் முடிவு	உத்தரவு	...
29.07.17	20.04.18	–	–	01.09.18	21.07.26	29.07.26	–

இவ்வழக்கு கடந்த 28.04.2018 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 21.07.2026 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.N.செல்வகுமார், திரு.K.பூபதி., அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.ரஞ்சித்குமார், திரு.S.கமலகண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவு 138 மற்றும் 142 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. வழக்கின் சுருக்கம்</u>

குற்றமுறையிடுவரின் மகள் மசீயா சுல்தானா என்பவருக்கும், 2ம் எதிரி நைனாமுகமது அவர்களின் மகன் என்.எம்.முகமது சுல்தான் என்பவருக்கும் சமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றதாகவும், இருவரும் தனி குடும்பம்

வசித்து வந்த நிலையில் கடந்த 23.07.2017ம் தேதி ரயிலில் பயணம் செய்யும் போது என்.எம்.சுல்தான் என்பவருக்கு உடல் நலம் குறைவு ஏற்பட்டதாகவும், அதனல் ரயில்வே காவல் துறையினரால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 26.07.2017ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், மசீயா சுல்தானின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு ரூ.5,00,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், கடந்த 29.07.2017ம் தேதியில் ரூ.92,530 ரொக்கமாக கொடுத்ததாகவும், மீதி தொகை ரூ.4,07,470/-தொகையை 3 மாத கால தவணையில் 2ம் எதிரியாகிய உம்முடைய 2வது மகன் 1ம் எதிரியின் பேங் ஆப் இந்தியா, ஆறாம்பாக்கம் வங்கி கிளை காசோலைகள் எண்கள் முறையே 011053, 011054, 011055 மற்றும் 011056 காசோலையை கொடுத்தாகவும், மேற்படி காசோலைகளை குற்றம் முறையிடுபவர் தனது வங்கிக் கணக்குள்ள ஸ்டேட் பேங் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையில் வசூலுக்காக போட்டபோது போதிய பணம் இல்லை (Funds insufficient) என 08.03.2018 மற்றும் 26.03.2018 ஆகிய தேதிகளில் திருப்பப்பட்டதாகவும், எனவே மனுதாரர் தன்னுடைய வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பினை 31.03.2018ம் தேதியில் எதிரிகளுக்கு அனுப்பியதாகவும், அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதற்கான பதிலை கடந்த 09.04.2018 கொடுத்ததாகவும், இன்று வரை காசோலை தொகை கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளார் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138

ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் வழக்கு காசோலையை புகார்தாரர் வகையரா என்னை மிரட்டி வாங்கினார்கள் என்றும் தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி பு.த.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:–

பு.த.சா.1 குற்றமுறையிடுபவரான அப்துல் ரஹீம் தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும் 29.07.2017ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவரின் தந்தை S.M.நைனா முகமது எழுதிகொடுத்த முச்சிலிக்கா அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 05.02.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011054 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/–க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.2 என்றும், 05.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011053 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/–க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.3 என்றும், 15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011056 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/–க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.4 என்றும், 15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011055 என்ற எண்ணுள்ள ரூ.1,74,070/–க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.5 என்றும், 08.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.6 என்றும், 26.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.7 என்றும், 31.03.2018 ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு பு.த.சா.ஆ.8 என்றும், 02.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குற்றமுறையீட்டாளர் வழங்கிய வழக்கறிஞர்

அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டைகள் பு.த.சா.ஆ.9 என்றும், 09.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கொடுத்த பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ.10 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் இந்த காசோலை நான் யாருக்கும் கொடுக்கவில்லை. புகார்தாரருக்கும் எனக்கும் எந்த வித கடனும் இல்லை. கொடுக்கல் வாங்கலும் இல்லை. என் அண்ணனின் இறப்பை வைத்து ஒரு நாள் ஆட்களை வைத்து மிரட்டி பணம் கொடுத்தால் தான் பிணத்தை அடக்கம் செய்ய விடுவோம் என என் அப்பாவை மிரட்டி ரூ.93,530 காசும் என் பெயரில் உள்ள காசோலையை நான் வேறு ஒருவருக்கு கொடுப்பதற்காக ஏற்கனவே நிரப்பி வைத்திருந்த காசோலையை என் தகப்பனாரை மிரட்டி அந்த காசோலையை என் கையில் இருந்து எடுத்துட்டு போய்டாரு புகார்தாரரும் அவருடன் இருந்த ஆட்களையும் வைத்திருந்தார்கள். அவர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை எனவும் கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. குற்றமுறையிடுபவர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.

6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான சட்டபூர்வ கடனுக்காக காசோலை வழங்கப்பட்டது என்று நிரூபித்துள்ளாரா ?

3. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

4. இவ்வழக்கில் காசோலையும் அந்த காசோலையில் உள்ள கையொப்பமும் எதிரியினுடையது தான் என்பதை குற்றமுறையீடுபவர் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபித்துள்ளாரா ?

7. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு

அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

" Affirmanti non neganti incumbit probatio " நிரூபிக்கும் பொறுப்பு குற்றம்சாட்டுபவரிடமே உள்ளது.

8. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:-

8(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.த.சா.ஆ.1 29.07.2017ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவரின் தந்தை S.M.நைனா முகமது எழுதிகொடுத்த முச்சிலிக்கா அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.2 05.02.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011054 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.3 05.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011053 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.4 15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011056 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-க்கான காசோலை அசல் பற்றியதாகும்,

பு.த.சா.ஆ.5 15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011055 என்ற எண்ணுள்ள ரூ.1,74,070/-க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.6 08.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசலில் காரணம் **"Payment stopped by drawer"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.7 26.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த அளித்த ரிட்டன் மெமோ அசலில் காரணம் **"Payment stopped by drawer"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.8 31.03.2018 ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு பற்றியதாகும், பு.த.சா.ஆ.9 02.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குற்றமுறையீட்டாளர் வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டைகள் பற்றியதாகும், பு.த.சா.ஆ.10 09.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கொடுத்த பதில் அறிவிப்பு பற்றியதாகும்.

8(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த நீதிமன்றம் புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது 08.03.2018 ம் தேதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வாணியம்பாடி கிளையில் **"Payment stopped by drawer"** என்றும், 26.03.2018 ம் தேதி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையில் **"Payment stopped by drawer"** என்று திருப்பப்பட்டுள்ளது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்பதை தீர்மானிக்கிறது. பு.த.சா.ஆ.8 மற்றும் பு.த.சா.ஆ.9 யினை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அறிவிப்பை பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

8(iii). மேலும், அவரது குறுக்கு விசாரணையில் " என்னுடைய மகள் பெயர் மசியா சுல்தான். என் மருமகன் பெயர் சுல்தான். என் மருமகன் என்ன படித்துள்ளார்கள் என தெரியாது. என் மகள் 12ம் வகுப்பு படித்துள்ளார். என் மருமகனின் குடும்பம் எப்படி பழக்கம் என்றால் என் மச்சினியின் மகன் மூலமாக பழக்கம். திருமணத்தின் போது மருமகனின் வயது தெரியாமல் எவ்வாறு மகளை திருமணம் செய்து வைத்தேன் என்றால் என் மகளுக்கும், மருமகனுக்கும் இது இரண்டாவது திருமணம். திருமணத்திற்கு பின்பு என் மகள் எங்கு வாழ்ந்தார் என்றால் ஆரப்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம். திருமணம் முடிந்த பிறகு இடையில் ஏதேனும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் அது பற்றி தெரியாது. என் மகள் போன் செய்து எதுவும் கூறமாட்டாரா என்றால் கூறமாட்டார். என் மருமகன் எப்போது இறந்தார் என்றால் 26.07.2017. என் மருமகன் எப்படி இறந்தார் என்றால் டிரெயினில் வந்து கொண்டிருக்கும்போது மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கேள்விப்பட்டு போய் பார்த்தேன் அங்கு அவர் உயிருடன் இருந்தார். எதனால் இறந்தார் என தெரியாது. நாங்கள் விஷம் வைத்துவிட்டதாக போஸ்மார்ட்டமில் கூறினார்கள். நல்ல நிலையில் ஊரிலிருந்து கிளம்பிய ஒரு நபர் வாணியம்பாடி வந்து உடனே எப்படி இறப்பார் என்றால் எனக்கு தெரியாது. 26ம் தேதி இறந்த என் மருமகனை 28ம் தேதி தான் அடக்கம் செய்தோம் என்றால் சரியல்ல. எதனால் தாமதமாக அடக்கம் செய்தோம் என்றால் என் மகள் திருமணமாகி ஒன்றரை வருடம் தான் ஆகியதாலும், மருமகன் வீட்டார் பணக்காரர்கள் என்பதாலும், ஊர்காரர்கள் என் மகளுக்கு நல்லது செய்யவேண்டும் என்று கூறியதால் என் மருமகன் வீட்டாரிடம் இருந்து ரூ.4,00,000/−ற்கான காசோலையை வாங்கிக்கொடுத்தார்கள். அதில் நான் எதுவும் பங்கு கேட்கக்கூடாது என எழுதி வாங்கிக்கொண்டார்கள். காசோலை யார் பெயரில் எழுதப்பட்டது என்றால் என் பெயருக்கு தான் எழுதி வாங்கப்பட்டது. நான் தனியாக பணம் ஏதாவது வாங்கினேனா என்றால் ரூ.97,000/− கையில் கொடுத்தார்கள். பணம் வாங்கிய பின் தான் என் மருமகனை அடக்கம் செய்ய விட்டோம் என்றாலும், பணம் கேட்டு பிணத்தை வைத்துக்கொண்டு பிளாக்மெயில் செய்தோம் என்றாலும் சரியல்ல. பள்ளிவாசல்காரர்கள்

தான் அவ்வாறு செய்தனர். பள்ளிவாசல்காரர்கள் ஏதாவது எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடம் தான் மருமகன் சொத்திலோ, என் மகளின் மாமனார் சொத்திலோ பங்கு கேட்கக்கூடாது என எழுதி வாங்கினார்கள். முச்சிலிக்காவை என் மகளின் மாமனார் எழுதினாரா அல்லது பள்ளிவாசலில் இருப்பவர்கள் எழுதினார்களா என தெரியாது. காசோலையை எனக்கு யார் கொடுத்தது என்றால் நைனா முகமது தான் கொடுப்பதாக சொல்லி கொடுத்தார்கள். நான் பொய்யான வார்த்தைகளை சாட்சியமளிக்கிறேன் என்றாலும், நைனா முகமது கொடுத்ததாக இருந்தால் 1ம் எதிரியின் கையொப்பமிட்டு ஏன் இருக்க வேண்டும் என்றால் அவர்கள் தான் என் மகள் பெயரில் எழுதி கொடுக்கிறேன் என்று கொடுத்தார்கள். என் மகளுக்கு அவரது மாமனார் தான் பணம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும்,அவரது மைத்துனரான 1ம் எதிரி ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்றால் அவரது அப்பா சொன்னதால் கூறியதால் தான் போட்டுக்கொடுத்தார். அப்பா தான் காசோலைகொடுக்கப்பட்டது என கூறுவது தவறு என்றாலும், காசோலை யாரும் கொடுக்கவில்லை. எடுத்துக்கொள்ளப்பட்டது என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி வியாபாரம் செய்து வந்த நிலையில் அவர் காசோலைகளை நிரப்பி வைத்திருப்பார் என்றாலும், அவ்வாறு நிரப்பு வைத்திருந்த காசோலையை தான் வைத்து தற்போது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல, பஞ்சாயத்துகாரர்கள் தான் கொடுத்தார்கள். காசோலையில் எனது மகள் பெயர் பூர்த்தி செய்திருக்கலாம் என்றால் அப்போது என் மகளுக்கு வங்கிக்கணக்கு இல்லை, காசோலையில் உள்ள கையெழுத்திற்கும். காசோலையில் என் பெயர் எழுதப்பட்டுள்ள கையெழுத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது என்றாலும், 1ம் எதிரியிடமிருந்து காசோலையை எடுத்து நானே நிரப்பு கொண்டேன் என்றாலும் சரியல்ல. காசோலையில் பெயரும், தேதியும் வெவ்வேறு கையெழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. கொஞ்சம் தான் எழுத தெரியும். வங்கியிலும் அதே கையெழுத்து தான் உள்ளது. முதல் காசோலை எண்.011053, ரூ.1,00,000/- தேதி- 05.03.2018 என்றாலும், மற்றொரு காசோலை எண் 011054, ரூ.1,00,000/- தேதி 05.02.2018 உள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. வேறொரு நபரை வைத்து காசோலை மோசடி செய்துள்ளேன் என்றால் காசோலையை எனக்கு நிரப்ப தெரியாது

என்பதால் எனது வழக்கறிஞர் செல்வகுமார் என்பவரிடம் கொடுத்து எழுதச்சொன்னேன். காசோலை பஞ்சாயத்தார்கள் மூலமாக கொடுக்கப்பட்டது என்றால் எதற்காக எனது வழக்கறிஞர் பூர்த்தி செய்யவேண்டும் என்றால் அவர்கள் காசோலையை கொடுக்கும்போது 3 மாதம் கால அவகாசம் கேட்டார்கள், நான் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தேன். அதன்பின் தான் நான் வங்கியில் செலுத்தினேன். பஞ்சாயத்து மூலமாக கொடுக்கப்பட்ட காசோலையில் தேதி ஏன் வேறுபட்டுள்ளது என்றால் நான் ஏதாவது மாற்றி கொடுத்திருப்பேன். என் மருமகன் இறந்தபிறகு என் மகளுக்கு வேறு திருமணம் செய்து வைத்தேனா என்றால் வைத்தேன். என் மகளுக்கு வேறு திருமணம் செய்த பிறகு நான் ஏன் இழப்பீடு கேட்கிறேன் என்றால் என் மனைவி இறந்து விட்டார். நானும் இருதய நோயாளி, நீங்கள் காலதாமதம் செய்ததினாலும், என் மகளுக்கு உயிருடன் இருக்கும்போதே ஏதாவது நல்லது செய்யவேண்டும் என்பதால் தான் திருமணம் செய்து வைத்தேன். இதில் இழப்பு என்பது என் மருமகனின் தந்தை நைனா முகமதுவிற்கு தான் என்றாலும், நான் இறப்புற்ற என் மருமகன் உடலை வைத்துக்கொண்டு பிளாக்மெயில் செய்து பணம் வாங்கினேன் என்றாலும், அதன்பிறகு என் மகளுக்கு நல்ல வாழ்க்கை அமைத்து கொடுத்துவிட்டேன் என்றாலும், பாதிப்பு என் மகளுக்கு இல்லை, என் மகளின் கணவர் வீட்டாருக்குதான் என்றாலும், நான் பணம் பறிக்கும் நோக்கத்தோடு காசோலையை எடுத்துக்கொண்டு மோசடி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது மகளின் திருமணத்திற்கு முன் 1ம் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. என் மகளின் திருமணத்திற்கு எதிரிகள் தரப்பில் இருந்து 5 சவரன் பூசாந்திரம் தாலி போட்டார்களா என்றால் 2 சவரன் போட்டார்கள். எனது மகள் B.Pharm படித்துள்ளார்கள் என்றால் கம்பூட்டர் படித்துள்ளார். எதிரி மேல் நான் எதற்காக குற்றம் சாட்டியுள்ளேன் என்றால் அவர் அப்பா என் மகளுக்கு 5 லட்சம் காசோலையை கொடுத்தார். அந்த பணத்தை கொடுக்கவில்லை என்பதற்காக வழக்கு தொடுத்தேன். நான் காசோலையை வங்கியில் செலுத்தும் போது என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் பணம் இல்லை என திருப்பப்பட்டது. காசோலை திருப்பபட்டதை குறித்து 1ம் எதிரிக்கு தகவல் தெரிவித்தேனா என்றால் நானும் ஊர்காரர்களும் போய் கேட்டோம், என்ன

செய்கிறீர்களோ செய்துக்கொள்ளுங்கள் என்னால் கொடுக்கமுடியாது என கூறினார். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 1ம் எதிரி காசோலை திருப்பப்பட்டதை குறித்து எந்த பதிலும் அளிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. எதிரியுடன் நல்ல பழக்கமா என்றால் இல்லை, சம்மந்தம் ஆன பிறகுதான் பேச்சுவார்த்தை இருந்தது. எதிரிக்கும் எனக்கும் எதாவது கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அதுக்குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் காசோலை மோசடி வழக்கை எதிரியின் மீது பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரியின் மீது தவறான வழக்கை தாக்கல் செய்து அவரை மானபங்கம் படுத்தியுள்ளேன் என்றால் இல்லை. இந்த வழக்கு பொய்யான வழக்கு என்றாலும் பணம் மோசடிக்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றாலும் சரியல்ல. ஊர்காரர்கள் முன்னிலையில் தான் காசோலையை கொடுத்தார்கள். என் மகளுக்கு நான் மூன்றாவது திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான்.அவருக்கு குழந்தை உள்ளதா என்றால் இல்லை. என் மருமகன் இறந்தபிறகு அவரை அடக்கம் செய்யவிடாமல் பணம் வாங்கியப்பின்புதான் அடக்கம் செய்யவிட்டேன் என்றால் இல்லை, ஊர்காரர்கள் தான் பணம் வாங்கினார்கள். நான் எனது குறுக்கு விசாரணையில் பணம் 97 ஆயிரத்தை வாங்கிக்கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் ஊர்காரர்கள் தான் வாங்கினார்கள், நான் வாங்கவில்லை " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8(iv). புகார்தாரர் தரப்பில் திருமதி.மசிகா என்பவர் பு.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதன்மை விசாரணையில் பு.த.சா.1ஐ ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். எதிரிதரப்பு குறுக்கு விசாரணையின் போது காசோலை மோசடி வழக்கு யாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் அப்பா பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நான்கு காசோலைகளும் என் தந்தைபெயருக்கு கொடுக்கப்பட்டு அந்த நான்கு காசோலைகளும் திருப்பப்பட்டது என்றால் சரிதான். இந்த காசோலை வழக்கு என் தந்தையால் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் தற்போது அந்த காசோலையில் எனக்கு

பங்கு உள்ளது என சொல்கிறேன் என்றாலும் இதில் யார் கடனாளி என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, நிஜாமுதின் தான் தரவேண்டும். இந்த காசோலை வழக்கில் நிர்பந்தப்படுத்தி பிரமான வாக்குமூலத்தில் தவறான சங்கதிகளை கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எந்த கடனுக்காகவும் கொடுக்கப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எந்த கடனுக்காகவும் கொடுக்கப்படவில்லை என்பதால் இந்த வழக்கு காசோலை மோசடி வழக்கின் கீழ் வராது என்றால் சரியல்ல. என் அப்பாவை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என் கணவர் ரயிலில் இருந்து இறங்கும் போது ஒரு பையில் பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்த அன்றே வீட்டில் இருந்த அனைத்து பொருட்களையும் பணத்தையும் எடுத்து சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. இந்த காசோலைக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் அதனால் நீதிமன்றத்தில் எந்த விதமான இழப்பீடும் வாங்க முடியாது என்றாலும் சரியல்ல. எனக்கு மூன்றாவது திருமணம் எப்போது நடந்தது என்றால் 23.05.2019 ம் வருடம் நடந்தது. வாணியம்பாடியில் உள்ள நியூடெல்லி மசூதியில் நடந்தது. 1 மற்றும் 2 வது எதிரிகள் சுயமாக சம்பாதித்த சொத்தில் எனக்கு எவ்வித பங்கும் இல்லை என்றால் சரியல்ல. நானும் என் கணவர் முகமது சுல்தானும் 23.07.2017 ம் வருடம் மதியம் சுமார் 01.30 மணிக்கு சென்னை சென்ரல் ரயில்வே நிலையத்தில் இருந்து ரயில் ஏறினோம் என்றால் சரிதான். என் கணவருக்கு அந்த ரயிலில் வரும் போது எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனது பிராமான வாக்குமூலத்தில் இந்த வழக்கின் காசோலை என்னுடைய எதிர்கால நலனுக்காக கொடுக்கப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

9. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமானங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ. பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு (preponderance of Probabilities) ஆகும்.

இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளாரா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் செலுத்தவில்லை, எனவே குற்றமுறையீட்டாளர் உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

11. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், குற்றமுறையிடுபவருக்கு காசோலை குற்றம்சாட்டப்பட்டவர் கொடுக்கவில்லை என்றும், கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், இந்த வழக்கின் காசோலையானது மாற்றுமுறை ஆவணசட்டத்தின் கீழ் வராது என்றும், சட்டப்படி வசூலிக்க வேண்டிய கடன் இதில் இல்லை என்றும், எனவே இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

12. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

13. குற்றமுறையிடுவரின் மகள் மசீயா சுல்தானா என்பவருக்கும், 2ம் எதிரி நைனாமுகமது அவர்களின் மகன் என்.எம்.முகமது சுல்தான் என்பவருக்கும் சமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றதாகவும், இருவரும் தனி குடும்பம் வசித்து வந்த நிலையில் கடந்த 23.07.2017ம் தேதி ரயிலில் பயணம் செய்யும் போது என்.எம்.சுல்தான் என்பவருக்கு உடல் நலம் குறைவு ஏற்பட்டதாகவும், அதனல் ரயில்வே காவல் துறையினரால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 26.07.2017ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், மசீயா சுல்தானின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு ரூ.5,00,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், கடந்த 29.07.2017ம் தேதியில் ரூ.92,530 ரொக்கமாக கொடுத்ததாகவும், மீதி தொகை ரூ.4,07,470/-தொகையை 3 மாத கால தவணையில் 2ம் எதிரியாகிய உம்முடைய 2வது மகன் 1ம் எதிரியின் பேங் ஆப் இந்தியா, ஆறாம்பாக்கம் வங்கி கிளை காசோலைகள் எண்கள் முறையே 011053, 011054, 011055 மற்றும் 011056 காசோலையை கொடுத்தாகவும், மேற்படி காசோலைகளை குற்றம் முறையிடுபவர் தனது வங்கிக் கணக்குள்ள ஸ்டேட் பேங் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளையில் வசூலுக்காக போட்டபோது போதிய பணம் இல்லை (Funds insufficient) என 08.03.2018 மற்றும் 26.03.2018 ஆகிய தேதிகளில் திருப்பப்பட்டதாகவும், எனவே மனுதாரர் தன்னுடைய வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பினை 31.03.2018ம் தேதியில் எதிரிகளுக்கு அனுப்பியதாகவும், அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதற்கான பதிலை கடந்த 09.04.2018 கொடுத்ததாகவும், இன்று வரை காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்பதும் மேலும் 29.07.2017ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவரின் தந்தை S.M.நைனா முகமது எழுதிகொடுத்த முச்சிலிக்கா அசல் பு.த.சா.ஆ.1 என்பதும், 05.02.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011054 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.2 என்பதும், 05.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011053 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/-க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.3 என்பதும், 15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம்

கிளையின் 011056 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/—க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.4 என்பதும், 15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011055 என்ற எண்ணுள்ள ரூ.1,74,070/—க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.5 என்பதும், 08.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.6 என்பதும், 26.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.7 என்பதும், 31.03.2018 ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு பு.த.சா.ஆ.8 என்பதும், 02.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குற்றமுறையீட்டாளர் வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டைகள் பு.த.சா.ஆ.9 என்பதும், 09.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கொடுத்த பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ.10 என்பதும் குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான சட்டபூர்வ கடனுக்காக காசோலை வழங்கப்பட்டது என்று நிரூபித்துள்ளாரா ?

14(i). சட்டபூர்வமாக வசூலிக்க வேண்டிய கடன் என்றால் என்ன?

மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881—ன் பிரிவு 138 ன் கீழ் **"சட்டபூர்வமாக வசூலிக்கப்படவேண்டிய கடன் அல்லது பொறுப்பு"(Legally enforceable debt or liability)** என்பது நீதிமன்றத்தின் மூலம் சட்டப்படி மீட்டு எடுக்கக் கூடிய செல்லுபடியாகும் ஒரு கடனை குறிக்கிறது.

14(ii). சட்டபூர்வமாக வசூலிக்கப்படவேண்டிய கடன் :

காசோலை வழங்கப்பட்ட தருணத்தில் அதை பெற்றவருக்கு உண்மையிலேயே மீட்டு எடுக்கப்பட வேண்டிய சட்டபூர்வமான கடன் பாக்கி ஆகும். பிரிவு 139ன் படி ஒரு

காசோலை வழங்கப்பட்டிருந்தால் அது சட்டபூர்வமான கடனை தீர்ப்பதற்காகவே வழங்கப்பட்டது என நீதிமன்றம் ஆரம்பத்தில் அனுமானம் செய்யும்.

15. இந்த வழக்கில் புகார்தாரருக்கு காசோலையானது சட்டபடியான கடனுக்குதான் காசோலை கொடுக்கப்பட்டுள்ளதா என நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்த்தபோது புகார்தாரர் அவரது முதன்மை விசாரணையில் " **குற்றமுறையிடுவரின் மகள் மசீயா சுல்தானா என்பவருக்கும், 2ம் எதிரி நைனாமுகமது அவர்களின் மகன் என்.எம்.முகமது சுல்தான் என்பவருக்கும் சமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றதாகவும், இருவரும் தனி குடும்பம் வசித்து வந்த நிலையில் கடந்த 23.07.2017ம் தேதி ரயிலில் பயணம் செய்யும் போது என்.எம்.சுல்தான் என்பவருக்கு உடல் நலம் குறைவு ஏற்பட்டதாகவும், அதனல் ரயில்வே காவல் துறையினரால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 26.07.2017ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், மசீயா சுல்தானின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு ரூ.5,00,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், கடந்த 29.07.2017ம் தேதியில் ரூ.92,530 ரொக்கமாக கொடுத்ததாகவும், மீதி தொகை ரூ.4,07,470/-தொகையை 3 மாத கால தவணையில் 2ம் எதிரியாகிய உம்முடைய 2வது மகன் 1ம் எதிரியின் பேங் ஆப் இந்தியா, ஆறாம்பாக்கம் வங்கி கிளை காசோலைகள் எண்கள் முறையே 011053, 011054, 011055 மற்றும் 011056 காசோலையை கொடுத்தாகவும்** "சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலனை செய்து பார்க்கும்போது புகார்தாரரின் மகளின் கணவர் இறந்துவிட்டதால் அவரது மகளின் **எதிர்கால நலனை கருத்தில் கொண்டு ரூ.5,00,000/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டதாகவும், கடந்த 29.07.2017ம் தேதியில் ரூ.92,530 ரொக்கமாக கொடுத்ததாகவும், மீதி தொகை ரூ.4,07,470/-தொகையை 3 மாத கால தவணையில் 2ம் எதிரியாகிய உம்முடைய 2வது மகன் 1ம் எதிரியின் பேங் ஆப் இந்தியா, ஆறாம்பாக்கம் வங்கி கிளை காசோலைகள் எண்கள் முறையே 011053, 011054, 011055 மற்றும் 011056 காசோலையை கொடுத்தாக** சொல்லியிருப்பது சட்டபூர்வமான கடன் மற்றும் பொறுப்பு இருப்பதாக நீதிமன்றம் கருதவில்லை.

16. அன்பு/உதவி என்பது "சட்டபடியான கடன் " ஆகாது.

எந்த ஒரு பிரதிபலனும் (Consideration)இல்லாமல் வெறும் அனுதாபம், குடும்ப உதவி அல்லது அறக்கட்டளை நோக்கில் தரப்படும் பணம் சட்டபடி திரும்ப கேட்கக்கூடிய கடன்(Legally enforceable debt) அல்ல. M/S Indus Airways Pvt.Ltd. and Ors Vs. M/S.Magnum Aviation Pvt.Ltd. and Another on 07 April 2014 Supreme Court என்ற முதன்மை வழக்கில் 14 வது பத்தியில் In swastik coaters (2), The single judge of Andhara Pradesh High Court, While considering the explanation to Sec.138 held **" Explanation to sec.138 of the negotiable instruments act clearly makes it clear that the cheque shall be relatable to an enforceable liability or debt and as on the issuing of the cheque "** என்றும் 16 வது பத்தியில் Balaji Sea foods என்ற வழக்கில் The Madras High Court held

" Sec.138 of the negotiable instruments act clearly makes it clear that where the cheque drawn by a person on account maintained by him with the banker for a payment of any amount of money to another person form out of that account for the discharge, in whole or in part , of any debt or other liability, is retuned by the bank unpaid, either the because of the amount of money standing to the credit of that account is insufficient to honour the cheque or that it exceeds the am ount arranged to be paid from that account by an agreement made with that banker, such person shall be deemed to have comitted an offence under section 138 of the act. The explanation reads that for the purposes of this section, ' Debt or other liability ' means a leagally enforceable debt or liability என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

17. இந்நிலையில் இந்த வழக்கின் புகார்தாரரின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே சட்டபூர்வமாக செலுத்தக்கூடிய கடன் இல்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் வழங்கப்பட்ட காசோலையானது புகார்தாரரின் மகளின் கணவர் இறந்த பிறகு மகளின் எதிர்கால நலனுக்காகதான் எதிரியின் காசோலை வழங்கப்பட்டதாக புகார்தாரரே அவரது புகார் மனுவிலும் மற்றும் பிரமாண பத்திரத்திலும் நேரடியாக ஒப்புக்கொண்டுள்ளார்.

17(i) **மேலும், பு.த.சா.2 அவரது குறுக்கு விசாரணையில்** " எனது பிரமாண வாக்குமூலத்தில் இந்த வழக்கின் காசோலை என்னுடைய எதிர்கால நலனுக்காக கொடுக்கப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் " என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், காசோலையானது சட்டபூர்வ கடனுக்காக கொடுக்கப்படவில்லை என்பது நீதிமன்றத்திற்கு புலனாகிறது. எனவே பு.த.சா.2ன் சாட்சியம் புகார்தாரருக்கு சாதகமாக அமையில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

18. மேலும் புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் போது **"எதனால் தாமதமாக அடக்கம் செய்தோம் என்றால் என் மகள் திருமணமாகி ஒன்றரை வருடம் தான் ஆகியதாலும், மருமகன் வீட்டார் பணக்காரர்கள் என்பதாலும், ஊர்காரர்கள் என் மகளுக்கு நல்லது செய்யவேண்டும் என்று கூறியதால் என் மருமகன் வீட்டாரிடம் இருந்து ரூ.4,00,000/–ற்கான காசோலையை வாங்கிக்கொடுத்தார்கள். அதில் நான் எதுவும் பங்கு கேட்கக்கூடாது என எழுதி வாங்கிக்கொண்டார்கள். காசோலை யார் பெயரில் எழுதப்பட்டது என்றால் என் பெயருக்கு தான் எழுதி வாங்கப்பட்டது. நான் தனியாக பணம் ஏதாவது வாங்கினேனா என்றால் ரூ.97,000/– கையில் கொடுத்தார்கள். பணம் வாங்கிய பின் தான் என் மருமகனை அடக்கம் செய்ய விட்டோம் என்றாலும், பணம் கேட்டு பிணத்தை வைத்துக்கொண்டு பிளாக்மெயில் செய்தோம் என்றாலும் சரியல்ல. பள்ளிவாசல்காரர்கள் தான் அவ்வாறு செய்தனர். பள்ளிவாசல்காரர்கள் ஏதாவது எழுதிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடம் தான் மருமகன் சொத்திலோ, என் மகளின் மாமனார் சொத்திலோ பங்கு கேட்கக்கூடாது என எழுதி வாங்கினார்கள். முச்சிலிக்காவை என் மகளின் மாமனார் எழுதினாரா அல்லது பள்ளிவாசலில் இருப்பவர்கள் எழுதினார்களா என தெரியாது. காசோலையை எனக்கு யார் கொடுத்தது என்றால் நைனா முகமது தான் கொடுப்பதாக சொல்லி கொடுத்தார்கள். நான் பொய்யான வார்த்தைகளை சாட்சியமளிக்கிறேன் என்றாலும், நைனா முகமது கொடுத்ததாக இருந்தால் 1ம் எதிரியின் கையொப்பமிட்டு ஏன் இருக்க வேண்டும் என்றால் அவர்கள் தான் என் மகள் பெயரில் எழுதி கொடுக்கிறேன் என்று கொடுத்தார்கள். என் மகளுக்கு**

அவரது மாமனார் தான் பணம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும்,அவரது மைத்துனரான 1ம் எதிரி ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்றால் அவரது அப்பா சொன்னதால் கூறியதால் தான் போட்டுக்கொடுத்தார். அப்பா தான் காசோலைகொடுக்கப்பட்டது என கூறுவது தவறு என்றாலும், காசோலை யாரும் கொடுக்கவில்லை. எடுத்துக்கொள்ளப்பட்டது என்றாலும் சரியல்ல. 1ம் எதிரி வியாபாரம் செய்து வந்த நிலையில் அவர் காசோலைகளை நிரப்பி வைத்திருப்பார் என்றாலும், அவ்வாறு நிரப்பு வைத்திருந்த காசோலையை தான் வைத்து தற்போது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல, பஞ்சாயத்துகாரர்கள் தான் கொடுத்தார்கள். காசோலையில் எனது மகள் பெயர் பூர்த்தி செய்திருக்கலாம் என்றால் அப்போது என் மகளுக்கு வங்கிக்கணக்கு இல்லை, காசோலையில் உள்ள கையெழுத்திற்கும். காசோலையில் என் பெயர் எழுதப்பட்டுள்ள கையெழுத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது என்றாலும், 1ம் எதிரியிடமிருந்து காசோலையை எடுத்து நானே நிரப்பு கொண்டேன் என்றாலும் சரியல்ல. காசோலையில் பெயரும், தேதியும் வெவ்வேறு கையெழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. கொஞ்சம் தான் எழுத தெரியும். வங்கியிலும் அதே கையெழுத்து தான் உள்ளது. முதல் காசோலை எண்.011053, ரூ.1,00,000/- தேதி-05.03.2018 என்றாலும், மற்றொரு காசோலை எண் 011054, ரூ.1,00,000/- தேதி 05.02.2018 உள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. வேறொரு நபரை வைத்து காசோலை மோசடி செய்துள்ளேன் என்றால் காசோலையை எனக்கு நிரப்ப தெரியாது என்பதால் எனது வழக்கறிஞர் செல்வகுமார் என்பவரிடம் கொடுத்து எழுதச்சொன்னேன். காசோலை பஞ்சாயத்தார்கள் மூலமாக கொடுக்கப்பட்டது என்றால் எதற்காக எனது வழக்கறிஞர் பூர்த்தி செய்யவேண்டும் என்றால் அவர்கள் காசோலையை கொடுக்கும்போது 3 மாதம் கால அவகாசம் கேட்டார்கள், நான் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தேன். அதன்பின் தான் நான் வங்கியில் செலுத்தினேன். பஞ்சாயத்து மூலமாக கொடுக்கப்பட்ட காசோலையில் தேதி ஏன் வேறுபட்டுள்ளது என்றால் நான் ஏதாவது மாற்றி கொடுத்திருப்பேன் " என்று சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலணை செய்து பார்க்கும்போது காசோலையானது ஊர்காரர்கள் தான் மகளின் நலனுக்காக வாங்கிக்

கொடுத்தார்கள் என்றும், புகார்தாரர்தான் எதிரி தரப்பில் இருந்து ரூ.97000த்தை பெற்றுக் கொண்டேன் என்றும், காசோலையை நைனா முகமது கொடுத்ததாக சொல்லி கொடுத்தார்கள் என்றும், முதல் காசோலை எண்.011053, ரூ.1,00,000/– தேதி– 05.03.2018 என்றாலும், மற்றொரு காசோலை எண் 011054, ரூ.1,00,000/– தேதி 05.02.2018 உள்ளது என்றால் அவருக்கு படிக்க தெரியாது என்றும், அவருக்கு நிரப்ப தெரியாது என்பதால் அவரது வழக்கறிஞர் செல்வகுமார் என்பவரிடம் கொடுத்து எழுதச்சொன்னேன் என்றும், காசோலை பஞ்சாயத்தார்கள் மூலமாக கொடுக்கப்பட்டது என்றும், எதற்காக எனது வழக்கறிஞர் பூர்த்தி செய்யவேண்டும் என்றால் அவர்கள் காசோலையை கொடுக்கும்போது 3 மாதம் கால அவகாசம் கேட்டார்கள், நான் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தேன். அதன்பின் தான் நான் வங்கியில் செலுத்தினேன் என்றும் சாட்சியம் அளித்திருப்பது புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவின் 138 கீழ் ஆக்கக் கூறுகளை மெய்ப்பித்திருந்தாலும், எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 மற்றும் 142 ன் கீழ் குற்றம் புரித்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்க தவறிவிட்டார். மேலும், எதிரிக்கு குற்றவியல் மோசடி செய்யும் எண்ணம் இருந்தது என்பதை அவர் சாட்சிகள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டார். எனவே எதிரி இ.த.ச பிரிவு 417 மற்றும் 420–ன் கீழ் குற்றம் புரித்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்க தவறிவிட்டார்.

19. Moral obligation Vs.Legal Liability

அன்பு, அனுதாபம், குடும்ப உதவி அல்லது எதிர்கால நல்வாழ்வு கருதி தரப்படும் வாக்குறுதிகள் மற்றும் காசோலைகள் " சட்டப்படியான கடனாக" மாறாது அது வெறும் Moral/Social obligation மட்டுமே.

19(i) இந்திய சாட்சிய சட்டப்படி "ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளை நிரூபிக்க தேவையில்லை "(Admitted facts need not to be proved) எனவே எதிரி பிரிவு 139 NI act– ன் கீழ் உள்ள அனுமானத்தை (presumption) தனியாக ஆதாரம் ஏதும் அளிக்காமலேயே புகார்தாரரின் சாட்சியத்தின் மூலமாகவே மறுத்துவிட்டார் என நீதிமன்றம் கருதுகிறது.

மேலும், பிரமாண பத்திரத்தில் புகார்தாரர் அளித்துள்ள வாக்குமூலமே எதிரியை விடுதலை செய்ய போதுமான முதன்மை ஆதாரம் ஆகும். எனவே புகார்தாரரே குற்றத்தின் முதன்மை அங்கத்தை (Essential ingredient of section 138) நிரூபிக்க தவறிவிட்டதாலும் காசோலை எதிர்கால நலனுக்காக மட்டுமே தரப்பட்டது என்று ஒப்புக்கொண்டதாலும், எதிரியை விடுவிப்பதே சட்டபூர்வ தீர்ப்பாக இருக்கும் என்று நீதிமன்றம் கருதுகிறது. மேலும், காசோலை சட்டபூர்வமாக தீர்க்கப்பட வேண்டிய கடனுக்காக வழங்கப்படவில்லை என்பதும், இதில் எவ்வித சட்ட பொறுப்பும் (legally enforceable liability) இல்லை என்பதும் தெளிவாகிறது.

20. எனவே பிரிவு 138 மற்றும் 142 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழும் 417, 420 இதச பிரிவின் கீழும் கூறப்பட்ட குற்றச்சாட்டு எதிரியின் மீது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை. எனவே எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டு பிரிவு 255(1) கீழ் விடுதலை செய்யப்படுகிறார்.

21. சட்டப்பிரிவு 139ன் கீழ் புகார்தாரர் ஒரு காசோலையை கடனை தீர்ப்பதற்காகவே பெற்றார் என்று நீதிமன்றம் கருதவேண்டும். இதை பொய் என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden Of Proof) குற்றம் சாட்டப்பட்டவரையே சாரும்.

21(i). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. மேலும், சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட்டவில்லை.

22. " Omnia Praesumuntur rite et solenniter esse acta " (அனைத்து அரசு அல்லது அதிகாரப்பூர்வ செயல்களும் முறையாகவும், சரியாகவும் செய்யப்பட்டதாகவே கருதப்படும்.)

22(i). வங்கியின் ரிட்டர் மெமோ என்பது ஒரு முறையான ஆவணம் என்பதால் குற்றமுறையிடுபவர் தரப்பில் பு.த.சா.ஆ.6 மற்றும் பு.த.சா.ஆ.7 முறையான ஆவணங்களாக நீதிமன்றம் கருதுகிறது. பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவின் கீழ் குற்றம்முறையீடுபவர் தனது தற்காப்பை நிரூபிக்க தவறிவிட்டார் என்பதால் பு.த.சா.1 ன் சாட்சியம் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அமையவில்லை என்பதால் குற்றம்முறையீடுபவரின் தரப்பு சாட்சியம் வலுவிழந்து விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

22(ii). மேலும், குற்றம் சாட்டப்பட்டவரிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் இந்த காசோலை நான் யாருக்கும் கொடுக்கவில்லை. புகார்தாரருக்கும் எனக்கும் எந்த விதகடனும் இல்லை. கொடுக்கல் வாங்கலும் இல்லை. என் அண்ணனின் இறப்பை வைத்து ஒரு நாள் ஆட்களை வைத்து மிரட்டி பணம் கொடுத்தால் தான் பிணத்தை அடக்கம் செய்ய விடுவோம் என என் அப்பாவை மிரட்டி ரூ.93,530 காசும் என் பெயரில் உள்ள காசோலையை நான் வேறு ஒருவருக்கு கொடுப்பதற்காக ஏற்கனவே நிரப்பி வைத்திருந்த காசோலையை என் தகப்பனாரை மிரட்டி அந்த காசோலையை என் கையில் இருந்து எடுத்துட்டு போய்டாரு புகார்தாரரும் அவருடன் இருந்த ஆட்களையும் வைத்திருந்தார்கள். அவர்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை எனவும் கூறியுள்ளார் என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை நிரூபிக்கும் வண்ணம் எவ்வித சான்றாவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம் திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.** மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்படவரின் கடமை என கூறுகிறது.

22(iv). ஆனால், எதிரி தனது முதல் கேள்வியில் குற்றம் குறித்து வினாவிய போது வழக்கு காசோலையை புகார்தாரர் வகையரா என்னை மிரட்டி வாங்கினார்கள் என்று கூறியிருப்பதால் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரால் தான் காசோலையானது நிரப்பி புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் இவ்வழக்கானது எதிரியின் மீது பொய்யாக தாக்கல் செய்யப்பட்டு இருக்குமோ என்ற சந்தேகத்தை நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது.

22(v). குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.10 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் காசோலையானது எதிரியுடையது என்று குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டிருந்தாலும் அந்த வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது தான் என்பதை புகார்தாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியதால் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

23. மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்கபடவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

24. முடிவாக, குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கபட்டு, கு.வி.மு.ச பிரிவு 255 (1) ன் கீழ் இந்நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 29 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

இணைப்புகள்

குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்

1.	பு.த.சா.1	திரு. அப்துல் ரஹீம்
2.	பு.த.சா.2	திருமதி.மசிகா

குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்

1.	பு.த.சா.ஆ.1	29.07.2017ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவரின் தந்தை S.M.நைனா முகமது எழுதிகொடுத்த முச்சிலிக்கா அசல்.
2.	பு.த.சா.ஆ.2	05.02.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011054 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/–க்கான காசோலை அசல்.
3.	பு.த.சா.ஆ.3	05.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011053 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/–க்கான காசோலை அசல்.
4.	பு.த.சா.ஆ.4	15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011056 என்ற எண்ணுள்ள ரூ.1,00,000/–க்கான காசோலை அசல்.
5.	பு.த.சா.ஆ.5	15.03.2018ம் தேதியிட்ட Bank of India வங்கி, ஆரம்பாக்கம் கிளையின் 011055 என்ற எண்ணுள்ள ரூ.1,74,070/–க்கான காசோலை அசல்.
6.	பு.த.சா.ஆ.6	08.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ.

7.	பு.த.சா.ஆ.7	26.03.2018ம் தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ.
8.	பு.த.சா.ஆ.8	31.03.2018 ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு.
9.	பு.த.சா.ஆ.9	02.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குற்றமுறையீட்டாளர் வழங்கிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டைகள்.
10.	பு.த.சா.ஆ.10	09.04.2018ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கொடுத்த பதில் அறிவிப்பு.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகள் –இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சான்றாவணங்கள் –இல்லை.

குறிப்பு

1. வழக்கின் முடிவு குற்ற முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கின் முடிவு எதிரிக்கும் தெரிவிக்கப்பட்டது. எதிரி இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

ஒம்/–கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.